2023 ஏப்ரல் 19]

நிச்சயமாக கவனத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

182—

சாலையை அகலப்படுத்துதல்

***12823—திரு. A.P. ஜெயசங்கரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, ஆத்தூர்-பெரம்பலூர் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதில்.*

தஞ்சாவூர்-பெரம்பலூர்-ஆத்தூர், தேசிய நெடுஞ்சாலை எண் 136 ஆகும். இந்தச் சாலை, சேலத்திலிருந்து ஆத்தூர் வழியாக பெரம்பலூர் செல்லும் சாலையாகும். ஆத்தூர் முதல் பெரம்பலூர் வரை 55 கி.மீ. உள்ள இந்தச் சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. 27-5-2022 அன்றுதான் மாநில நெடுஞ்சாலை அலகிற்கு அது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது சேலம் மாவட்டத்திலுள்ள 27 கி.மீ. நீளச் சாலையாகும். தற்போது 7 மீட்டர் அகலத்தில் இருவழிச் சாலையாக உள்ள இச்சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றுவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்க ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன் அவர்கள்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்*

கழகத்தின் நிறுவனர், பொன்மனச் செம்மல், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இரு மாபெரும் தெய்வங்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும் வணங்குகிறேன். இந்த அவையிலுள்ள அனைவரையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்று பதில் அளித்துள்ளார்கள். ஆத்தூர்-பெரம்பலூர் நெடுஞ்சாலை போக்குவரத்து மிகுந்த பகுதியாக உள்ளதால், இந்தக் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றித் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நரசிங்கபுரம் முதல் அம்மாபாளையம் Malar Matriculation Higher Secondary School *வரை, சாலையை அகலப்படுத்தி,* center median *அமைத்து, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு இந்தச் சாலை விரிவாக்கப் பணி என்பது மிக முக்கியமானதாக உள்ளது. நரசிங்கபுரம், சாரதாபுரம்* roundtana, G.H., A.C.M.S., *உழவர் சந்தை வழியாக* Malar Matriculation Higher Secondary School *பகுதி வரை உள்ள சாலையை நான்குவழிச் சாலையாக ஆக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று மஞ்சினி-பெரம்பலூர் சாலையை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி கேட்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பதிவு செய்யுங்கள்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சினி பிரிவு சாலையில் 2018 ஆம் ஆண்டில் மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில், திட்டமிடப்பட்டு, பூர்வாங்கப் பணிகள் முடிக்கப்பட்டு, மண் பரிசோதனை அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு,* Railway gate-*க்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கும் பணியானது கொரோனா நோய்த் தொற்று காரணமாகவும் ஆட்சி மாற்றம் காரணமாகவும்*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19]

கிடப்பில் போடப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டது போன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சாலையாகும். இப்போதுதான் அவர்கள் மாநில நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அதனால்தான் துறையின் சார்பாக, அதனை நான்குவழிச் சாலையாக மாற்றுகின்ற திட்ட மதிப்பீடுகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நான் சொன்னேன்.*

முற்பகல் 10–15

அவர் குறிப்பிட்ட, அந்த மேம்பாலப் பணி என்பது NH*–ன் ஓரமாகவே இரயில்வே லைன் போகிற காரணத்தினால் அங்கு உடனே மேம்பாலம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஏனென்றால், ஆத்தூர்–பெரம்பலூர் நான்குவழிச் சாலையை அகலப்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அந்தப் பணிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்ட பின்புதான் ஆத்தூர் நகரிலே இரயில்வே மேம்பாலம் கட்டுவதா, இல்லையா என்பதை, அதனுடைய சாத்தியக்கூறுகளை அறிந்துதான் அதற்குப் பதில் சொல்ல முடியும். எனவே, முதலில் இந்தப் பணிகள் முடியட்டும். அதற்குப் பின்னால் அந்தப் பணிகளை நாங்கள் எடுத்துக்கொள்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.P. *ஜெயசங்கரன் அவர்கள்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *அதேபோல, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில்* Ring Road *அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு 2021–ல் நில எடுப்புப் பணிகளும், நில அளவீடு பணிகளும் துவங்கப்பட்ட நிலையில், வேகமாக நடைபெற்ற பணிகள்*

தற்போது சுணக்கமாக நடைபெற்று வருகின்றன. ஆத்தூர் நகரப் பகுதியில் நாளொன்றுக்கு 15,000 வாகனங்கள் வந்து செல்வதால், மிகுந்த போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் அதிகரிக்கின்றன. பெரம்பலூரிலிருந்தும், சென்னையிலிருந்தும் ராசிபுரம் செல்லும் வாகனங்கள் வந்தாலும் இந்த வழியில்தான் செல்ல வேண்டும். ஆத்தூர் town *வழியாகத்தான் செல்ல வேண்டும். அதேமாதிரி, ராசிபுரத்திலிருந்து வரும் வாகனங்கள், சென்னையிலிருந்து வரும் வாகனங்கள், துறையூர் போக வேண்டியதாக இருந்தாலும் சரி, இந்த வழியில்தான் செல்ல வேண்டியிருக்கும். அதனால்தான்,* peak hours*-ல் பார்த்தோம் என்றால், பள்ளி வாகனங்கள், கல்லூரி வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் வந்து செல்வதால் மிகுந்த இடையூறாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வாருங்கள். கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *அதனால், இந்த உள்வட்டச் சாலை, ஆத்தூர் மக்களுக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. எல்லா நில எடுப்புப் பணிகளும் முடிந்திருக்கின்ற நிலையில்,* slow*-வாக நடந்து கொண்டிருக்கிறன. அதிகாரிகளைக் கேட்டால், பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். இந்த* ring road *இருந்தால்தான் ஆத்தூர் மக்கள் நிம்மதியாக இருக்க முடியும் என்ற ஒரு நிலை இருக்கிறது. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிற அந்தப் புறவழிச் சாலை, உளுந்தூர்பேட்டையிலிருந்து சேலத்திற்குப் போகிற* NH *சாலைதான்* main NHAI *சாலை. ஏற்கெனவே, ஆத்தூரிலே நகரப் பகுதி வரை சென்ற சாலைதான் பழைய சாலை. இதில்தான் நெரிசல் அதிகமாக இருக்கிறது; போக்குவரத்து அதிகமாக இருக்கிறது; அதனால், புறவழிச் சாலை அமைக்கப்படுமா என்ற ஒரு கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள். எனவே, அதற்குக் கிட்டத்தட்ட 11 கிலோ மீட்டர் வரை நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய ஒரு*

2023 ஏப்ரல் 19]

சூழல் இருக்கிறது. இதற்கென DPR *தயார் பண்ணுவதற்காக ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. திட்டமிட்டபடி அதற்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. ஆனாலுங்கூட, இந்த நான்குவழிச் சாலை முடிந்த உடனேயே, உளுந்தூர்பேட்டை சாலையிலிருந்து ஆத்தூருக்கு உள்ளே நகரப் பகுதிக்குப் போகாமல் ராசிபுரம் போகிற சாலையை இணைப்பதற்கு வேண்டிய திட்ட மதிப்பீடுகள் மற்றும்* DPR *தயார் செய்யச் சொல்லியிருக்கிறேன். அது 11 கிலோ மீட்டர் தூர சாலையாகும். இந்த ஆண்டு நிதிநிலைக்கேற்ப அதற்கு முன்னுரிமை அளிக்க முடியுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி இந்தப் பணியை இந்த அரசு தொடரும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* R.D. *சேகர் அவர்கள்.*

திரு. R.D. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பெரம்பூர் தொகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் மற்றும் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்ற வியாசர்பாடி* EH road*-ஐ டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி வரை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலையை அகலப்படுத்த முடியுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். தற்போது இந்தச் சாலை ஒருவழிப் போக்குவரத்து, அதாவது* one way traffic*-லே உள்ளது. நகர்ப்புறமாக இருக்கிற காரணத்தால் இருபுறமும் கட்டடங்கள் அதிகமாக இருக்கின்றன. இப்போது இருக்கிற சாலை என்பது 7 மீட்டர் அகலச் சாலை. இதை அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னால், பல கோடி ரூபாய் அதற்காகச் செலவிட வேண்டிய ஒரு சூழல் இருக்கிறது. எனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்டதன் அடிப்படையில் இதை அரசின் சார்பாக ஆய்வு செய்து முறையாக விரிவுபடுத்த முடியுமா என்பதை நிதிநிலைக்கேற்ப அறிந்து இதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

[*2023 ஏப்ரல் 19*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்படாமல் நீண்டகாலமாக பாதியிலே நின்று கொண்டிருக்கிறது. நம்முடைய ஆட்சி அமைந்ததும், அதைக் கட்டி முடிக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தோம். அதற்கு 104 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு நிர்வாக ஒப்புதல் எப்போது அளிக்கப்படும்; பணி எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்–அக்கரைபேட்டை–வேளாங்கண்ணி சாலையில் கடவு எண் 48–ல் இரயில்வே பாலம் கட்டுவது சம்பந்தமாகத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதுபோல, மேற்படி இரயில்வே பாலம் அமைப்பதற்கு 104 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அநேகமாக இந்த மாதமே கட்டுமானப் பணிகளைத் துவக்குகின்ற நிலையில் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தனபால் அவர்கள்.*

திரு. ப. தனபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, அவினாசி–அன்னூர்–மேட்டுப்பாளையம் வழியாக ஊட்டிக்குச் செல்கின்ற சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. ஊட்டிக்குச் செல்கின்ற மக்கள் அதிகமாக அந்தச் சாலையைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அந்தச் சாலையை நான்குவழிச்*

2023 ஏப்ரல் 19]

சாலையாக விரிவுபடுத்த அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பேரவைத் தலைவர், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அன்னூர்–அவினாசி வழியாக ஊட்டிக்கு செல்கின்ற சாலையை நான்குவழிச் சாலையாக விரிவுபடுத்த முடியுமா என்று ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். இது தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சம்பந்தப்பட்டது. அதே நேரத்தில், விரிவுபடுத்த வேண்டுமென்பதற்காக அரசின் சார்பாக ஏற்கெனவே இரண்டு கடிதங்கள் ஒன்றிய அரசினுடைய அமைச்சர் மாண்புமிகு நிதின்கட்கரி அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டு, அதற்குரிய* DPR *தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அது முடிந்தவுடன் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அநேகமாக இந்த நிதியாண்டிலேயே ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற நிலை இருக்கிறது. முன்னாள் பேரவைத் தலைவராயிற்றே அதனால் இன்னும் கொஞ்சம் வேகமாக அந்தச் சாலையை அமைப்பதற்கு அரசு முயற்சிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.*

திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் அணைப்பட்டியிலிருந்து பெரியணை பேரணி பெரியபாலம் வரையுள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சாலைகள் பழுதடைந்துள்ளன. மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் மோசமாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, இந்தச் சாலையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகிற சாலை, ODR சாலையா, MDR சாலையா அல்லது மாநில நெடுஞ்சாலையா என்பதை நான் அறிய முடியாத ஒரு சூழ்நிலை. எனவே, அவர் எனக்குக் கடிதம் கொடுத்தால் அது எந்த வகைப்பாடு சாலை என்பதை அறிந்து, இந்த ஆண்டினுடைய நிதிநிலைக்கேற்ப, அந்தச் சாலைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்லிலிருந்து குமுளி வரை செல்கின்ற சாலை தேசிய நெடுஞ்சாலையாக வகைமாற்றம் செய்யப்பட்டு, நான்குவழிச் சாலையாக அமைப்பதற்காக அரசாணையும் பெறப்பட்டு, அந்த வழித்தடங்களில் 9 by-pass-களுக்கும் அரசாணை பெறப்பட்டது. Transstroy என்ற நிறுவனம் அதை tender எடுத்திருந்தது. ஆனால், அந்தச் சாலை இருவழிச் சாலையாக உறுதிப்படுத்தப்பட்டு by-pass சாலையும் போடப்பட்டுவிட்டது. ஆனால், நான்குவழிச் சாலையாக அமைக்காத காரணத்தால், போக்குவரத்து நெரிசல் மிகுதியாக இருக்கிறது. இந்தச் சாலை இரு மாவட்டங்களை மட்டுமல்லாமல், இரண்டு மாநிலங்களையும் இணைக்கின்ற சாலையாகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து, இந்தச் சாலை மிகவும் அவசியமான சாலை. இதை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்; உறுதி செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே முதலமைச்சராக இருந்தவர்; இந்தத் துறையினுடைய அமைச்சராகவும் இருந்தவர். அதனால் அவருக்கு அனைத்து விவரங்களும் தெரியும். பொதுவாக, தேசிய நெடுஞ்சாலை என்பதை அவரே அறிந்த ஒன்று. அதை நான்குவழிச் சாலையாக அமைக்க வேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கமாகவும்,

2023 ஏப்ரல் 19]

கேள்வியாகவும் அமைந்திருக்கிறது. போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கிறது. எனவே, இவர் கேள்வி கேட்டதையே மையப்படுத்தி, நான்குவழிச் சாலை ஆக்குவதுதான் சாலச் சிறந்தது என்ற அடிப்படையிலே ஒன்றிய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுத, இந்த அரசு முன்முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

183—

வேளாண்மைக் கல்லூரி

***54734—திரு. அ. பண்ணாரி:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எங்கள் பொதுச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கத் தேவையான 500 ஏக்கர் நிலம் உள்ளது. மேலும், பல்வேறு பயிர்கள் பயிர் செய்ய ஏற்ற மண் வளமும், நீர் வளமும், இயற்கை வளமும் உள்ளது. ஆகவே,*